# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : திரு. **மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்:310/பேரூ/2025**
**நாள் : 23.01..2026**

மு. தினேஷ்,
மணலூர்பேட்டை,
கள்ளக்குறிச்சி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
மணலூர்பேட்டை பேரூராட்சி,
கள்ளக்குறிச்சி மாவட்டம். – எதிர் மனுதாரர்

கள்ளக்குறிச்சி மாவட்டம், மணலூர்பேட்டை, கதவு எண்.18, சேனியர் வீதி, என்ற முகவரியை சேர்ந்த திரு. மு. தினேஷ் என்பவரது 18.08.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 19.08.2025 அன்று பெறப்பட்டு, 310/பேரூ/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கள்ளக்குறிச்சி மாவட்டம், மணலூர்பேட்டை, கதவு எண்.18, சேனியர் வீதி என்ற முகவரியை சேர்ந்த திரு. மு. தினேஷ் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்த தனது 18.08.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

கள்ளக்குறிச்சி மாவட்டம், மணலூர்பேட்டை பேரூராட்சியில் நடைபெறும் பணிகளில் பல்வேறு முறைகேடுகள், மோசடிகள் நடைபெறுகிறது. பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் பேரூராட்சி மன்றத் தலைவர் மற்றும் பேரூராட்சி இளநிலை பொறியாளர் ஆகிய மூவரும் பல்வேறு முறைகேடுகளில் ஈடுபடுகின்றனர்.

தமிழ்நாடு நகர்ப்புற சாலை கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் 2018-2019-ன் கீழ் ந.க. எண். 180/2018/அ1 நாள் 19.07.2018ன்படி ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் முதல் தலைமை நீரேற்று நிலையம் வரை மற்றும் செட்டியார் மயான பாதை வரை தார்சாலை ரூ.50 இலட்சத்தில் அமைக்கப்பட்டது.

மேற்கண்ட ஒழுங்குமுறை விற்பனை கூடம் முதல் தலைமை நீரேற்று நிலையம் வரை செட்டியார் மயான பாதைக்கு மீண்டும் தமிழ்நாடு நகர்ப்புற சாலை கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் 2024-2025 (TURIP) திட்டத்தின் கீழ் ந.க. எண். 295/2024 நாள் 16.09.2024ன்படி ரூ.149 இலட்சத்தில் தலைமை நீரேற்று நிலையம், செட்டியார் மயான பாதைக்கு சாலைப் பணிகள் மேற்கொள்ள டெண்டர் விடப்பட்டு பணிகள் நடைபெற்றுள்ளது.

2018-2019ஆம் ஆண்டில் நடைபெற்ற பணிகளுக்கு மீண்டும் 2024-2025ஆம் ஆண்டில் மீண்டும் அதே பகுதிக்கு சாலை பணி மேற்கொள்ள எந்த ஆவணங்களின் அடிப்படையில் டெண்டர் விடப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது என விசாரணை மேற்கொள்ள வேண்டுகிறேன்.

மேலும் மணலூர்பேட்டை இளநிலை பொறியாளர் மற்றும் செயல் அலுவலர் மற்றும் பேரூராட்சி மன்றத் தலைவர் மீதும் உரிய விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

மேலும் மணலூர்பேட்டை பகுதியில் நடைபெறும் சாலைப் பணிகளை கே.ஏ. செங்குட்டுவன் என்ற ஒப்பந்ததாரர் மட்டுமே மேற்கொள்கிறார். ஒப்பந்ததாரர், இளநிலை பொறியாளர், செயல் அலுவலர், தலைவர் (பேரூராட்சி) ஆகிய நான்கு நபர்களும் ஒன்று சேர்ந்து முறைகேடு செயல்களில் ஈடுபடுகின்றனரா என விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். " என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 02.09.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் மணலூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலரை கேட்டுக் கொள்ளப்பட்டது.

3. மணலூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 29.09.2025 நாளிட்ட அறிக்கை ந.க.எண்.546/2025–ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

"கள்ளக்குறிச்சி மாவட்டம், மணலூர்பேட்டை பேரூராட்சிக்குட்பட்ட சேனியர் தெருவில் வசிக்கும் திரு. மு. தினேஷ், த/பெ. திரு. முத்துக்கிருஷ்ணன் என்பவரால் அளிக்கப்பட்ட புகார் மனுவின் மீது கீழ்க்காணும் எனது விளக்கத்தினை பணிந்து சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க. எண். 8820/2018/பி5, நாள் 12.07.2018ன்படி மணலூர்பேட்டை பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் கடந்த 2018-2019ஆம் ஆண்டில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒழுங்குமுறை விற்பனை கூடம் முதல் தலைமை நீரேற்று நிலையம் வரை மற்றும் செட்டியார் மயானபாதை வரை தார்சாலை அமைத்தல் பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளித்து உத்தரவிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் பேரூராட்சி அலுவலக கடித ந.க. எண். 180/2018/அ1, நாள் 19.07.2018ன்படி இப்பணிகளை மேற்கொள்ள உரிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கடந்த 21.08.2018ஆம் தேதியன்று வரப்பெற்ற 4 ஒப்பந்தப்புள்ளிகளை அட்டவணைப்படுத்தப்பட்டு மதிப்பீட்டு கூர்ந்தாய்வின்படி குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய திரு. கமலம் கன்ஸ்ட்ரக்ஷன், செஞ்சி, விழுப்புரம் அவர்களுக்கு பேரூராட்சி அலுவலக பணி உத்தரவு ந.க.எண். 180/2018/அ1, நாள் 03.09.2018ன்படி உத்தரவு வழங்கப்பட்டதை தொடர்ந்து உரிய ஒப்பந்ததாரரால் பொறியியல் துறை அலுவலர்களின் அறிவுரைகளின்படி மேற்குறிப்பிட்ட திட்டப் பணியான தார்சாலை அமைத்தல் பணியினை முழுவதுமாக செய்து

முடிக்கப்பட்டு பொறியியல் துறை அலுவலர்களால் அளவுகள் மற்றும் மேலளவுகள் செய்யப்பட்டு பட்டியல் தயாரித்து பேரூராட்சி அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற பின்னர் இப்பேரூராட்சியிலிருந்து மேற்காணும் திட்டப் பணிக்கான தொகையினை விடுவிக்கப்பட்டுள்ளது என்பதனை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மேற்காணும் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு சுமார் 5 வருடங்களுக்கு மேல் கடந்து விட்ட நிலையிலும் சாலையானது வடகிழக்கு பருவமழையின் காரணமாகவும், வாகனங்கள் அதிகமாக சென்று வருவதாலும் அச்சாலை சேதமடைந்து இருந்த நிலையில் பொதுமக்களின் நலன் கருதி பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண். 7652/2024/ஆ5, நாள் 25.07.2024ன்படி 2024-2025ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற சாலை கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தலைமை நீரேற்று நிலையம் ரோடு, மாவடி விநாயகர் கோவில் தெரு, சிவன் கோவில் தெரு, சிவன் கோவில் தெரு-1, சிவன் கோவில் தெரு-3, சிவநேசன் நகர் குறுக்கு தெரு, அய்யனார் கோவில் தெரு, கடை வீதி, முனியப்பன் கோவில் தெரு, கிருஸ்டின் மயானபாதை ரோடு, சேனைத் தலைவர் தெரு மற்றும் செட்டியார் மயானபாதை ஆகிய தெருப்பகுதியில் தார்சாலை அமைத்தல் பணிக்கு ரூ.149.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளித்து உத்திரவிடப்பட்டது.

அதனடிப்படையில், பேரூராட்சி அலுவலக கடிதம் ந.க.எண். 295/2024, நாள் 16.09.2024ன்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கடந்த 04.10.2024ஆம் தேதியன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை அட்டவணைப்படுத்தப்பட்டதில் மதிப்பீட்டு சூர்ந்தாய்வின்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு. கே.ஏ. செங்குட்டுவன், கடப்பாக்கம், சென்னை அவர்களுக்கு 09.10.2024ஆம் தேதியில் பணி உத்தரவு வழங்கப்பட்டது. உரிய ஒப்பந்ததாரரால் பொறியியல் துறை அலுவலர்களின் அறிவுரைகளின்படி மேற்குறிப்பிட்ட திட்டப் பணியான தார்சாலை அமைத்தல் பணியினை முழுவதுமாக செய்து முடிக்கப்பட்டு பொறியியல் துறை அலுவலர்களால் அளவுகள் மற்றும் மேலளவுகள் செய்யப்பட்டு பட்டியல் தயாரித்து இப்பேரூராட்சி அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற பின்னர் இப்பேரூராட்சியிலிருந்து மேற்காணும் திட்டப் பணிக்கான தொகையினை விடுவிக்கப்பட்டுள்ளது என்பதனை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், திரு. மு. தினேஷ் த/பெ முத்துகிருஷ்ணன் என்பவரால் புகார் மனுவில் தெரிவிக்கப்பட்ட ஒழுங்குமுறை விற்பனை கூடம் முதல் தலைமை நீரேற்று நிலையம் வரை மற்றும் செட்டியார் மயானபாதை வரை அமைக்கப்பட்ட தார்சாலையானது கடந்த 2018-2019ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணியாகும். மேலும் சுமார் 5 வருடங்கள் கடந்த விட்ட நிலையில் சாலையானது வடகிழக்கு பருவமழையின் காரணமாகவும், வாகனங்கள் அதிகமாக சென்று வருவதாலும் அச்சாலை சேதமடைந்து இருந்து நிலையில் மீளவும் 2024-2025ஆம் ஆண்டில் இதே சாலையினை பொதுமக்களின் நலன் கருதி போடப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டு சாலையானது தற்போது நல்ல நிலையில் உள்ளது என பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். " என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான மணலூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர்களை 15.12.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 01.12.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரரான திரு. மு. தினேஷ் என்பவர் 15.12.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார். அதில் –

- கள்ளக்குறிச்சி மாவட்டம், மணலூர்பேட்டை முதல்நிலை பேரூராட்சிக்குட்பட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் முதல் தலைமை நீரேற்று நிலையம் வரை மற்றும்

செட்டியார் மயானபாதை வரையுள்ள பகுதிகளில் 2018-19ஆம் ஆண்டில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் பேரூராட்சியால் தார்சாலைகள் அமைக்கப்பட்டது. ஆனால் இச்சாலைகள் எவ்வித சேதமும் இல்லாமல் நன்கு பயன்பாட்டில் இருந்த இதே பகுதியில் உள்ள சாலைகளை மீண்டும் 2024-2025ஆம் ஆண்டில் ரூ.149 இலட்சம் மதிப்பீட்டில் முறைகேடாக சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

எனவே, சம்பந்தப்பட்ட பேரூராட்சி அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான மணலூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் 15.12.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- கள்ளக்குறிச்சி மாவட்டம், மணலூர்பேட்டை பேரூராட்சிக்குட்பட்ட விற்பனை கூடம் முதல் தலைமை நீரேற்று நிலையம் வரை மற்றும் செட்டியார் மயானபாதை வரை ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் 2018-2019ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட தார்சாலையானது வடகிழக்கு பருவமழையின் காரணமாகவும், வாகனங்கள் அதிகமாக சென்று வருவதாலும் அச்சாலை சேதமடைந்து இருந்த நிலையில் உதவி பொறியாளர் அவர்களின் அறிக்கையின் அடிப்படையில் மன்ற தீர்மானம் பெறப்பட்டு பொது மக்களின் நலன் கருதி பேரூராட்சிகளின் இயக்குநரின் நிர்வாக அனுமதி பெற்று உரிய ஒப்பந்தப்புள்ளி மூலம் 2024-2025ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற சாலை கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தலைமை நீரேற்று நிலையம் ரோடு, மாவடி விநாயகர் கோவில் தெரு, சிவன் கோவில் தெரு, சிவன் கோவில் தெரு-1, சிவன் கோவில் தெரு-3, சிவநேசன் நகர் குறுக்குத் தெரு, அய்யனார் கோவில் தெரு, கடை வீதி, முனியப்பன் கோவில் தெரு, கிருஸ்டின் மயானபாதை ரோடு, சேனைத் தலைவர் தெரு மற்றும் செட்டியார் மயானபாதை ஆகிய தெருப்பகுதியில் தார்சாலைகள் ரூ.149 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டன.

- குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் திரு. K.A. செங்குட்டுவன் மூலம் மேற்காணும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பொறியியல் துறை அலுவலர்களால் அளவுகள் மற்றும் மேலளவுகள் செய்யப்பட்ட பின்னரே திட்டப் பணிகளுக்கான தொகை விடுவிக்கப்பட்டுள்ளதால் ஒப்பந்ததாரர் தேர்வில் எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை.

- மேற்படி சாலைகள் 2018-2019–ல் அமைக்கப்பட்டு சுமார் 6 ஆண்டுகளுக்கு பின்னரே மீண்டும் 2024-2025–ல் சாலைகள் அமைக்கப்பட்டு நன்முறையில் பொதுமக்களின் பயன்பாட்டில் செயல்பட்டு வருகிறது என இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்". என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார்மனு, அவரது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான மணலூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர் தனது புகார் மனு மற்றும் வாக்குமூலத்தில் மணலூர்பேட்டை பேரூராட்சியில் 2018-19ஆம் ஆண்டில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் முதல் தலைமை நீரேற்று நிலையம் வரை மற்றும் செட்டியார் மயானபாதை வரை உள்ள பகுதிகளில் தார்சாலைகள் அமைக்கப்பட்ட அதே பகுதிகளில் மீண்டும் 2024-25ஆம் ஆண்டில் ரூ.149 இலட்சம் மதிப்பீட்டில் முறைகேடாக தார்சாலைகள் அமைக்கப்பட்டும் மற்றும் ஒரே ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என புகார் தெரிவித்திருப்பது அறிய முடிகிறது.

மனுதாரரின் புகார் குறித்து, 2018-19ஆம் ஆண்டில் மனுதாரர் தெரிவிக்கும் பகுதிகளில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட தார்சாலைகள், கடந்த ஆண்டுகளில் பெய்த வடகிழக்கு பருவமழை, கனரக வாகனங்களின் போக்குவரத்து காரணமாகவும், சாலைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு 5 ஆண்டுகள் கடந்த விட்ட நிலையிலும் சாலைகள் சேதமடைந்ததன் காரணமாக பேரூராட்சி உதவிப் பொறியாளரின் அறிக்கையின் அடிப்படையில், பேரூராட்சி மன்ற தீர்மானம் நிறைவேற்றியும், பேரூராட்சிகளின் இயக்குநரின் நிர்வாக அனுமதி பெற்றும் உரிய ஒப்பந்தப்புள்ளி மூலம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் மூலம் 2024-25ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற சாலை கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பேரூராட்சிக்குட்பட்ட தலைமை நீரேற்று நிலையம் ரோடு, சிவன் கோவில் தெருக்கள், செட்டியார் மயான பாதை உட்பட 12 தெருக்களில் ரூ.149 இலட்சம் மதிப்பீட்டில் தார்சாலைகள் எவ்வித முறைகேடின்றி பொதுமக்களின் பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்டன என்பதை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இருப்பினும் 2024-25ஆம் ஆண்டில் ரூ.149 இலட்சம் மதிப்பீட்டில் பழுதடைந்த 12 பேரூராட்சி சாலைகளில் தார்சாலையாக அமைக்கப்பட்ட பணியின் தரம் மற்றும் அளவுகள் உறுதி செய்திட அரசு பொறியியல் கல்லூரி மூலம் மூன்றாம் தரப்பு ஆய்வு செய்யப்பட்டு உரிய அறிக்கையினை மணலூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் பெற்று, அவ்வறிக்கையினை பேரூராட்சிகளின் இயக்குநரின் ஆய்வுக்கு அனுப்புமாறு மணலூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்றம் நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மேலும் 2024-25ஆம் ஆண்டில் ரூ.149 இலட்சம் மதிப்பீட்டில் மணலூர்பேட்டை பேரூராட்சிக்குட்பட்ட பழுதடைந்த 12 சாலைகளில் தார்சாலையாக அமைக்கப்பட்டதில் பேரூராட்சிக்கு எவ்வித நிதியிழப்பும் ஏற்படவில்லை என்பதை உறுதி செய்திடும் வகையில் உள்ளாட்சி நிதி சிறப்பு தணிக்கைக் குழு மூலம் தணிக்கை செய்து, அதன் அறிக்கையை 3 மாத காலத்திற்குள் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுப்பி வைக்குமாறு உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை இயக்குநருக்கு பரிந்துரை செய்யலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026 ஆம் ஆண்டு ஜனவரி 23-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. மு. தினேஷ்,
18, சேனியர் வீதி,
மணலூர்பேட்டை,
கள்ளக்குறிச்சி மாவட்டம் - 605 754

2) செயல் அலுவலர்,
மணலூர்பேட்டை பேரூராட்சி,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

3) இயக்குநர்,
உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை,
571, அண்ணாசாலை, நந்தனம்,
சென்னை – 600 035.

4). பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

5) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்